**தலைப்பு 267 – முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் - 2024**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 267 – முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை**

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை முல்லைத்தீவு மாவட்ட செயலகம், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 05 நடைமுறையல்லாத சொத்து உருப்படிகளின் பெறுமதி ரூபா 792,328,720 ஆகக் காட்டப்பட்டிருந்த போதிலும், அவை மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுகளில் ஆரம்பமீதியாக படிவம் ACA - 6 (SA – 82) இல் ரூபா 809,160,653 வெளிப்படுத்தப்பட்டிருந்தமையினால், ரூபா 16,831,933 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிக்கூற்றுகளில் முறையான ஒப்பிடுதல்கள் மேற்கொள்ளப்பட்டு தேவையான திருத்தங்கள் செய்யப்படுவதுடன் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களினை வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நிதிச்செயலாற்றுகை கூற்றின் பிரகாரம் மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு ரூபா 37,663,044 ஆகவும், திறைசேரியின் படிவம் SA – 82 இன் பிரகாரம் ரூபா 26,163,044 ஆகவும், வெளிப்படுத்தப்பட்டிருந்தமையினால் வேறுபாடு ரூபா 11,500,000 அவதானிக்கப்பட்டது. | இவை தொடர்பாக பதிவுகள் உரிய முறையில் சிகாஸ் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்ட போதிலும் திறைசேரிப் படிவம் (SA 82) இல் இடம்பெற்றிருக்காமையினால் மேற்படி வேறுபாடானது காணப்படுகிறது. | நிதி கூற்றுக்களை தயாரிக்கும் போது, அவை திறைசேரி படிவங்களுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட துல்லியமான மீதிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டுமென்பதுடன் தொடர்புடைய திருத்தங்கள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| ((இ) | மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தில் பொருத்தப்பட்ட சூரிய மின்னுற்பத்தி கலங்களிற்கான அடிச்சட்டக வேலைக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மூலதன செலவினமான ரூபா. 1,279,956 பெறுமதி கட்ட நிர்மானிப்பு மற்றும் பராமரிப்பு செலவின உருப்படியின் கீழ் மீண்டுவரும் செலவினமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் தவிர்க்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செலவினங்கள் சரியான வகைப்படுத்தல்களின் கீழ் கணக்கிடப்படுவது உறுதி செய்யப்படுவதுடன் சொத்துகளின் மீதிகள் துல்லியமாக பிரதிபலிக்கப்படுவதையும், உறுதி செய்யவும் தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | | | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| ((ஈ) | மாவட்ட செயலகத்தால் மீளாய்வாண்டில் உள்நாட்டலுவல்கள், இராஜாங்க அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினூடாக நிர்மாணிக்கப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா. 5,087,191 பெறுமதியான 03 மூலதன வேலைத்திட்டங்கள் கட்டடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அச் செலவினங்கள் மூலதன சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தலின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | முழுமையாக கட்டிடத்தினை பூர்த்தி செய்வதற்கு மூலதன சொத்து நிர்மான தலைப்பின் கீழ் ஒதுக்கீடு போதாமையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது | செலவினங்கள் சரியான வகைப்படுத்தல்களின் கீழ் கணக்கிடப்படுவது உறுதி செய்யப்படுவதுடன் சொத்துகளின் மீதிகள் துல்லியமாக பிரதிபலிக்கப்படுவதையும், உறுதி செய்யவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டசெயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக இலகுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும், அம் மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் விவரங்கள் கணக்காய்வுக்கு அறிக்கையிடப்பட வேண்டும். |

### 3.2 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்து விற்பனை செய்வதற்காக மாவட்டச் செயலகத்தினால் 02 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2015 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்த நெல் கொள்வனவுக்கான முற்பணம் கூட்டுமொத்தம் ரூபா 20,729,785 இல் கூட்டுமொத்தம் ரூபா 11,609,125 அல்லது 56 சதவீதமானது நாளதுவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது விசுவமடு விவசாயிகள் சங்கத்தால் 30.04.2025 அன்று ரூபா 250,000 செலுத்தப்பட்டதால் நிலுவை ரூபா 10,300,000 ஆகவும் பனங்காமம்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மீதி ரூபா 1,309,125 ஆகவும் காணப்படுகின்றது. | முற்பணத்தை காலத்திற்குள் வசூலிக்க நடவடிக்கை எடுக்கத் தவறிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், அவர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், நிலுவையில் உள்ள முற்பணத் தொகையை விரைவாக அறவிட தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 பிரதேசசெயலகத்தினால் மீளாய்வாண்டு மற்றும் 2021 ஆம் ஆண்டு சௌபாக்கிய உற்பத்தி கிராமம் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட 04 எண்ணிக்கையான செயற்த்திட்டங்களின் கூட்டுமொத்தம் ரூபா 26,473,450 பூர்த்திசெய்யப்பட்டு 03 வருடங்கள் கடந்த நிலையில் முன்னேற்றங்கள் அடையப்பட்டிருக்காததுடன் குறித்த செயற்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட நலன் அடையப்பெற்றிருக்கவில்லை. இதனால் சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டங்களின் குறிக்கோள்களான உற்பத்திக் கிராமங்களினை உருவாக்குவதனூடாக உற்பத்திகளினை ஊக்குவித்தல், வேலையின்மையை குறைத்தல், உள்ளூர் உற்பத்திகளினை ஊக்குவித்தல் மற்றும் தேசிய உற்பத்தியினை அதிகரித்தல் ஆகிய நோக்கங்கள் அடையப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டுள்ளது. | பிரதேச செயலகங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது அதற்கான பதில் பிரதேச செயலகங்களுகளிடமிருந்து கிடைக்கப்பெறுமிடத்து தங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். | எதிர்பாக்கப்பட்ட இலக்குகளை அடைய முறையான கண்காணிப்பு மற்றும் தொடர்ச்சியான பின்தொடர்வு மேற்கொள்ளத் தவறிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மற்றும் திட்டங்களிலிருந்து அதிகபட்ச பயன்களைப் பெறவும், குறிப்பிட்ட கால எல்லைக்குள் எதிர்பாக்கப்பட்ட நோக்கங்களை அடையவும் ஒரு திட்டமிட்ட செயல்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். |

## 4.2 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 ஆம் ஆண்டில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தினால் ரூ. 3,657,500 பெறுமதியில் ஆரம்பிக்கப்பட்ட 08 செயற்திட்டங்கள் இடையில் நிறுத்தப்பட்டதால், மீளாய்வாண்டின் 31 டிசம்பர் நிலவரப்படி அவை நிறைவடையாமல் பயனற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 04 வேலைகள் தேர்தல் காலப்பகுதியில் அரசியல் மாற்றங்களால் நிறுத்தப்பட்டது. ஏனைய 04 வேலைகளும் வேலைச்சூழல், காலநிலையின் எதிர்மறையான தாக்கங்களினாலும் செயற்படுத்த முடியாதநிலை ஏற்ப்பட்டது. | அபிவிருத்தி திட்டங்களை முறையாக மேற்பார்வை செய்யத் தவறிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை பயனுள்ளதாக அடைய, திட்டங்களை ஆரம்பிக்கும் முன் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்திற்கமைவாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களினை 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளும் பொருட்டு மாவட்டச் செயலகத்தினால் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்த கொள்வதற்காகச் செயற்படுத்தப்பட வேண்டியவைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்களை அளந்து கொள்வதற்கான குறிகாட்டிகள் என்பன அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் இனிவரும் காலங்களில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடையாளம் காணவும், தொடர்புடைய முன்னேற்றத்தை அடைய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 703 ஆக காணப்பட்டிருந்த போதிலும் 2024 டிசம்பர் 31 நிலவரப்படி உள்ளபடியான பதவியணியினர் | கருத்துரைக்கப்பட்டிருக்கவில்லை. | ஆளணி மீளாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும், தேவையான வெற்றிடங்களை |

எண்ணிக்கை 594 ஆக இருந்தது. அந்த நாளில் 207 வெற்றிடங்கள் மற்றும் 98 மிகையாளணியினர் இருந்தனர் எனக் அவதானிக்கப்பட்டது.

மட்டுமே நிரப்ப தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் மற்றும் அதிகமான ஆளணிகள் பிற நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட வேண்டும்.